[*1994 ஏப்ரல் 26*

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலே 300–க்கும் மேற்பட்ட செங்கல் சூளைகள் சேதமடைந்தன. அதற்காக ஒவ்வொரு செங்கல் சூளைக்கும் 15,000 ரூபாய் வீதம் 45 இலட்சம் ரூபாய் மானியமாகக் கொடுத்து உதவ வேண்டுமென்று அன்றைய மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அரசுக்கு எழுதியிருப்பதாக என்னிடம் கூறியிருந்தார்கள்; காண்பித்தார்கள். அந்தச் செயற்குறிப்புகள் அரசிடம் வந்துள்ளனவா ? மாண்புமிகு அமைச்சரவர்கள் 50,000 ரூபாய் மானியம் மொத்தம் கொடுப்பதற்காக இங்கே அறிவுரைகள் வந்திருப்பதாகக் கூறினார்கள். அதுமட்டுமல்லாமல் அந்தச் செங்கல் சூளைகள் இப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சமாகச் செயல்பட்டு வருகின்றன. அந்தச் செங்கல் சூளைகளுக்கு இந்த வருஷம் சேல்ஸ் டாக்ஸ் போட்டிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் அந்த சேல்ஸ் டாக்ஸிலிருந்தும் அவர்களை–அந்த சேல்ஸ் டாக்ஸை நீக்கி அந்த ஏழை தொழிலாளிகளைக் காப்பாற்ற அரசு முன் வருமா என்று அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருவெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட செங்கல் சூளை பற்றித்தான் மூலக் கேள்வி உள்ளது. ஆகையால் இதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துக் கொடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 393, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர். *393–*

மானாவாரி நிலங்களில் எண்ணெய் வித்துக்கள் பயிரிட அரசு மானியம் வழங்குதல்.

**22018*–திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வெம்பக்கோட்டை பகுதியிலுள்ள மானாவாரி நிலங்களில் அரசு மானியம் வழங்கி எண்ணெய் வித்துக்கள் பயிரிட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டத்தின் கீழ் வெம்பக்கோட்டை பகுதியில் சுமார் 2000 எக்டேர் மானாவாரி நிலங்களில் பயிராகும் எல்லா எண்ணெய் வித்துப் பயிர்களுக்கும் மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

1994 ஏப்ரல் 26]

2. இந்த ஆண்டு 1993-94 ஆம் ஆண்டில் எண்ணெய் வித்து உற்பத்தி திட்டத்தின் கீழ் வெம்பக்கோட்டை பகுதியில் மானாவாரி நிலங்களில் எண்ணெய் வித்து உற்பத்திக்கு 1,77,754 ரூபாய் 50 காசு மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு 21-2-1994 வரை 1,55,695 ரூபாய் 10 காசு செலவிடப்பட்டுள்ளது.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புரட்சித் தலைவியினுடைய அரசாங்கம் இன்றைய தினம் அங்கே எண்ணெய் வித்துக்கள் பயிரிடுவதற்காக மானியம் ஒதுக்கியிருப்பது என்பது உண்மை. அங்கே விவசாயிகள் அதனால் பயன் பெறவில்லை என்ற ஒரு காரணத்திற்காகத்தான் நான் இந்தக் கேள்வியையே இங்கே எழுப்பியிருக்கிறேன். இதை அமைச்சரவர்கள் அறிவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் விவசாயிகளுக்குப் போய் சேர வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒதுக்கப்பட்ட தொகையானது, விவசாயிகளுக்கு நேரடியாக ரொக்கமாகத் தருவது அல்ல. அவர்கள் விதை வாங்குகின்றபொழுது விதைக்கு மானியம், அதை விதைக்கின்ற காலத்திலே அந்த விதையோடு கலக்கின்ற இரசாயன மருந்துகளுக்கு மானியம், மருந்துகளைத் தெளிக்கின்ற தெளிப்பான்களுக்கு மானியம், உரத்திற்கு மானியம் என்று அறுவடை காலம் வரை ஒவ்வொரு பகுதியாக மானியம் வழங்கப்படுகிறது. இதையெல்லாம் சேர்த்துத்தான் விவசாயிகளுக்குப் போய்ச் சேருகிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியம் எல்லாம் குறிப்பிட்ட ஒரு 5 நபர்களுக்குத்தான் வழங்கப்பட்டு விட்டது என்பதை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். இதை அமைச்சரவர்கள் அறிவார்களா? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 பேர் என்று சொல்கிறார். அதுபோல வழங்கப்பட்டிருந்தால் யார் யாருக்கு என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொடுத்தால் நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசாங்கம் என்றைக்கும் தயார். அதுமட்டுமல்ல, ஒரு திட்டத்தைப் போடுகின்றபொழுது இந்த அரசாங்கம் மிக உன்னிப்பாக, விழிப்போடுதான் போடுகிறது. இன்றைக்கு எண்ணெய் வித்துத்

துறையைப் பொறுத்தமட்டிலே ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டு 100 எக்டேர் பரப்புக்குப் போட வேண்டும் என்று அவர்களை விதை உற்பத்தியாளர்கள் என்ற பட்டியலிலே தேர்வு செய்து, அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 394, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

394–

சேலம் உருக்காலைத் திட்ட நிலத்திலிருந்து விளையாட்டு அரங்கம் கட்டுதல்.

***19783–திரு. க. அர்ச்சுனன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் உருக்காலைக்கென கையகப்படுத்தப்பட்டுள்ள நிலத்தில், எஞ்சியுள்ள நிலத்தில் ஒரு விளையாட்டு அரங்கம் கட்ட, மத்திய அரசிடமிருந்து நிலத்தைப் பெற மாநில அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் உருக்காலைத் திட்டத்திற்குக் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் மொத்தம் 3962.70 ஏக்கர்கள். இவை அனைத்தும், சேலம் உருக்காலைக்கான முதற்கட்டப் பணிக்கும், மற்ற விரிவாக்கப் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில், சேலம் உருக்காலை நிறுவனம், நகராட்சிக்குட்பட்ட எல்லையிலுள்ள 150 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு அரசுக்கு, மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்த, குத்தகை அடிப்படையில், மத்திய அரசின் அனுமதியுடன் ஒதுக்கியுள்ளது. இவை தவிர, வேறு நிலம் எதுவும் விளையாட்டு அரங்கம் கட்ட, சேலம் உருக்காலை நிறுவனத்திடமிருந்து பெறுவது சாத்தியமில்லை.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கிட்டத்தட்ட 4 ஆயிரம் ஏக்கர் நிலத்தை 'இன்டக்ரல் ஸ்டீல் பிளான்ட்' உருவாக்குவதற்காக கையகப்படுத்தப்பட்டது. தற்போது, அது ஒரு இரும்பு தொழிற்சாலையாக வராமல், ஒரு உருட்டாலையாக இருக்கிற அந்தச் சூழ்நிலையில், 4 ஆயிரம் ஏக்கர் நிலம், உருட்டாலைக்குத் தேவையில்லை என்கிற காரணத்தினால், அந்த நிலமெல்லாம் வீணாகப் போய்க்கொண்டிருப்பதை உணர்ந்து, 150 ஏக்கர் நிலம் மோகன்